# THE LABOUR COURT, SALEM
# C.P.No. 14 of 2022

<u>21.08.2025</u>

**PW1 – திரு. பெரியசாமி**

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை– (எதிர்மனுதாரர் தரப்பில்)**

நான் 02.04.1986 ல் நடத்துநராக பணியில் சேர்ந்து Checking Inspector ஆக பணிஓய்வு பெற்றேன். நான் பணியில் இருந்த காலகட்டத்தில் எந்த ஓய்வூதிய ஒப்பந்தம் இருந்தது என தெரியுமா என்றால் தெரியவில்லை. அதைப்பற்றி மனுவில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் பணியில் இருந்த காலகட்டத்தில் தரஊதியம் ரூ.2,400/–கொடுத்து வந்தார்கள் என்றால் ரூ.2,400/–கொடுத்தார்கள். எனக்கு பணிஉயர்வு தந்தபோது Increment தரப்படவில்லை. நான் கடைசியாக வாங்கிய மாதசம்பளம் ரூ.26,364/–. நான் முன்கூட்டு தொகை தோராயமாக ரூ.2,01,000/– பெற்றுள்ளேன். நான் முன்கூட்டு தொகை பெற்றுள்ளதாக மனுவிலோ, சாட்சிய பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல.

நான் கடைசியாக வாங்கிய மாதசம்பளம் எவ்வளவு அகவிலைப்படி கணக்கிடப்பட்டு கொடுக்கப்பட்டது என்றால் ஞாபகம் இல்லை. நான் பணிஓய்வு பெற்ற காலகட்டத்தில் 90% அகவிலைப்படி கொடுத்து வந்தார்கள் என்றால் சரியல்ல. நான் தற்போது எவ்வளவு சதவீதம் அகவிலைப்படி அடிப்படையில் பென்சன் வாங்கிவருகிறேன் என்றால் சரியாக தெரியவில்லை. சென்ற வருடம் டிசம்பர் மாதம் வாங்கிய பென்சன் தொகை எவ்வளவு என்றால் சரியாக தெரியவில்லை. நான் இந்த மாதம் வாங்கிய பென்சன் தொகை தோராயமாக ரூ.20,260/–. போன மாதம் ரூ.630/– தொகை குறைவாக பென்சன் வாங்கினேன். எனது கணக்கீட்டு மனுவில் எவ்வளவு தொகை கேட்டுள்ளேன் என்றால் சரியாக ஞாபகம் இல்லை. என்னுடைய வங்கிக்கணக்கு புத்தகத்தை ஆவணமாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல்

செய்துள்ளேன். என்னுடைய வங்கிக்கணக்கு புத்தகத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றும், தவறான கணக்கீட்டின் அடிப்படையில் இந்த கணக்கீட்டு மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மனுவில் நான் பெற்றுக்கொண்ட முன்கூட்டு தொகையை பற்றி குறிப்பிடாமல் நானாக ஒரு கணக்கீடு செய்து மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. முன்கூட்டு தொகை வாங்கியிருந்தால் மாதமாதம் பென்சன் தொகையில் பிடித்தம் செய்வார்கள் என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை

Sd/ (M. Shanthi)
Presiding Officer,
Labour Court, Salem